# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **CC .74/2016** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **PW.1 லட்சுமி** |
| **Husband Name** | : கருப்பையா |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2021

மு.வி:

நான் டி.கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிபட்டியலுள்ள 2 மற்றும் 6,7,8,9 ஆகிய சாட்சிகளை எனக்கு தெரியும். எனது கணவர் பெயர் கருப்பையா. எனது கணவர் விபத்தில் இறந்துவிட்டார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் கருப்பையா வேலைவிஷயமாக இருசக்கரவாகனத்தில் தேப்பம்பட்டிக்கு சென்றுவிட்டு வரும்போது மாலை 5மணியளவில் ரெட்டியப்பட்டி அருகே அவருக்கு விபத்து ஏற்பட்டுருப்பதாக எனது கணவரின் மொபைல் மூலமாக கிடைத்த நம்பரில் ஒரு நபரை தொடர்பு கொண்டு அந்தநபர் எனக்கு விபரம் சொன்னதன் பேரில் காவல்நிலையம் சென்றேன். மறுநாள் மருத்துவமனைக்கு சென்று இறந்த எனது கணவரைப்பார்த்தேன். எனது கணவருக்கு முதுகு தோள்பட்டை முகம் ஆகிய இடங்களில் அடிப்பட்டு இருந்தது. நான் அப்போது கர்ப்பமாக இருந்தேன். சம்பவத்தை கேள்விப்பட்டு சாட்சி தங்கப்பாண்டி சம்பவமிடம் சென்று நேரில் பார்த்துள்ளார். நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். நான் கொடுத்த புகார் மனு **அசாஆ1**. புகார் உள்ள கைரேகை என்னுடையதுதான். போலீசார்

என்னை விசாரணை செய்தார்கள். விபத்து ஏற்படுத்திய எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும்.

கு.வி.

நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு வழக்கு சம்பவம்நேரிடையாகதெரியாது என்றுசொன்னால் சரிதான். உங்கள் கணவர் மேற்கேலிருந்து கிழக்கு நோக்கி இருசக்கரவாகனத்தில்வரும் போது சம்பவ இடத்தில் ஒரு வயதான பாட்டி புளியம்பழம் சேகரித்து கொண்டுருந்தார் அப்போது அந்த பாட்டி மேல் மோதாமல் தவிர்ப்பதற்காக உங்கள் கணவர் வாகனத்தை வடக்கில் தெற்கு பக்கமாக திருப்பும்போது இந்தவழக்கின் சம்பவம் நடந்ததாக கேள்விபட்டிர்களா என்று சொன்னால் சரிதான். உங்களது கணவர் விபத்துஇழப்பீடு கேட்டுவழக்கு தாக்கல் செய்துள்ளதால் உண்மை சம்பவத்தை மறைத்து மிகைப்படுத்தி புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை

/Sd./Lakshmi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.